கிறது. அதற்காக ஏராளமான பேர்கள் மனுச் செய்திருக்கிறார்கள். அவர்கள் உடனடியாகத் தொழில் செய்ய ஆர்வத்தோடு இருப்பதால், அங்கே தொழிற் கூடங்களைக் கட்டித் தரலாமென்ற உத்தேசமும் இருக்கிறது. அதற்கான மனுக்களைப் பெற்று, முறைப்படி யார் யாருக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமோ அப்படித் தர இயலும்.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிற இளைஞர்களுக்கு, அதிலும் குறிப்பாக பி.ஈ., படித்த, பாலிடெக்னிக்கில் படித்த மாணவர்கள் மனுச் செய்தால் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா? கிண்டி திரு.வி.க. தொழிற்பேட்டையில் ஏற்கெனவே நில ஒதுக்கீடு செய்து, சிறு தொழில் செய்பவர்களுக்கு இன்னும் 'அசைன்மென்ட்' வழங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படியானால் 'அசைன்மென்ட்களை' வழங்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்களுடைய பதிலில் தொழிற் கூடங்கள் கட்டிக் கொடுக்கும் வாய்ப்பு இல்லை என்று சொன்னார்கள். ஆனால் பழநி போன்ற முனிசிபல் நகரங்களில் 400, 500 பேர்கள் தொழில் செய்வதற்கு லைசன்ஸ் பெற்றிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை ஊக்குவிக்க வேண்டும். இப்போது அவர்கள் தொழில் நடத்த இடமில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்கள் தொழில் நடத்த வாய்ப்பு அளிக்கும் வகையில் தொழிற் கூடங்களை கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் வழிவகை செய்வார்களா?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: பேரவைத் தலைவரவர்களே, மூலக் கேள்வி கிண்டியில் உள்ள திரு.வி.க. தொழிற்பேட்டை சம்பந்தப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய சொந்தத் தொகுதியான பழநியில் இப்படிப்பட்ட தொழிற் பேட்டைகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களோடு நானும் அந்தப் பகுதிக்குச் சென்று சுற்றிப் பார்த்தேன். குறைந்தபட்சம் 10 பேர் விண்ணப்பித்தால் உடனடியாகத் தொழிற் பேட்டைகளைக் கட்டித்தர ஏற்பாடு செய்யப்படும்.

பசும்பொன் முத்துராமலிங்கம், இராமநாதபுரம் மற்றும் காமராஜர் மாவட்டங்களில் தனி மாவட்ட தொழிற் கூடங்கள்.

42---(*வினா எண். 9498) திரு. க. பாரமலை: மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், காமராஜர் மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் தனித்தனியாக மாவட்டத் தொழில் மையங்கள் துவங்க அரசு நடவடிக்கைகள் எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏற்கனவே மாவட்டத் தொழில் மையம் இயங்கி வருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தை மூன்று மாவட்டங்களாகப் பிரித்த காரணத்தால் ஏற்பட்ட புதிய மாவட்டங்களான பசும்பொன் முத்துராமலிங்கம் மற்றும் காமராஜர் மாவட்டங்களில் மாவட்டத் தொழில் மையங்கள் துவங்க 21-4-86-ல் அரசு ஆணை வெளியிடப்பட்டு அங்கு தொழில் மையங்கள் முறையே 7-5-86, 15-5-86-லிருந்து இயங்கி வருகின்றன.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் பிரிந்த பின்னாலே, விரைவாகத் தொழில் மையங்கள் புதிய மாவட்டங்களில் அமைய வேண்டுமென்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்றுதான் இந்தக் கேள்வி போடப்பட்டது. ஏற்கெனவே அங்கே தொழில் மையங்கள் தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று அமைச்சரவர்கள் சொன்னதற்கு மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: பேரவைத் தலைவரவர்களே, மாவட்டத் தொழில் மையங்கள் இப்போது இயங்கி வருகின்றன மாவட்டத் தொழில் மையங்களிலிருந்து ஏழைகளுக்குப் பணம் கொடுக்க பாங்குகளுக்கு பரிந்துரை செய்த கடிதங்கள் திரும்பி வருகின்றன. சென்ற முறை அப்படித் திரும்பி வந்த 2 கடிதங்களை அமைச்சரவர்களிடம் கொடுத்திருக்கிறேன். அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அமைச்சரவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாவட்டத் தொழில் மையங்கள் மூலமாக வேலையற்ற இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கொடுக்கும் கடன் பற்றிக் கேட்கிறார்கள். அவர்கள் கொடுத்த மனுக்களைப் பரிசீலனை செய்து, கொடுக்கப்பட்ட மனுக்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. சரியானவை அல்ல என்று சொல்லி அவர்களுக்குத் தகவல் அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே மீண்டும் மனு கொடுத்தால் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.